# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 11 புதன்கிழமை (24 - 05 - 2000) VALAMPURI ஒலி: 156

★ யாழ், யுத்தநிலை குறித்து பிரதமர்வாஜ்பாய் தலைமையில்

# படைத்தளபதிகள் அமைச்சர்கள் அவசரமாகக்கூடி தீவிர ஆராய்வு!

## நோர்வே பிரதி அமைச்சர் டில்லி விரைவு!

(புதுடில்லி)

இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணத்தில் மாறிவரும் யுத்தநிலை தொடர்பாக உன்னிப்பாகக்கவனித்து வரும் இந்திய மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக நேற்றுக் காலையும் மாலையும் அமைச்சரவையைக்கூட்டி ஆராய்ந்துள்ளது.

இதே வேளை நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் றேமன்ட் ஜொகான்சன் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பான செய்தியுடன் இன்று இந்தியப்பிரதமர் வாஜ்பாயை சந்திக்கவுள்ளார். இச்சந்திப்பிற்காக பிரதமர் வாஜ்பாய் தனது போபால் விஜயத்தை ரத்துச்செய்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவை நேற்று முன்தினம் சந்தித்த நோர்வே வெளியுறவு அமைச்சர் றேமன்ட்ஜொகான்சன் இன்று புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயை சந்தித்து இந்தியாவின் நிலைப்பாடு குறித்துபேசவுள்ளார்.

இப்பேச்சுக்கு முன்னோடியாக நேற்று பிரதமர் வாஜ்பாய் இரண்டு தடவைகள் அமைச்சரவைக் கூட்டத்தையும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தையும் கூட்டி ஆலோசனை நடத்தியுள்ளதுடன், முப்படைத்தளபதிகளைச் சந்தித்ததுடன் பாது

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இந்தியாவின் இராணுவ உதவியே தேவை!

### பிரதி அமைச்சர் கிரியல்ல

[சென்னை]

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்தியா உதவ வேண்டும் என்று இலங்கைப்பிரதி வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல இந்தியாவைக் கேட்டுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் கிரியல்ல செய்தியாளர்களிடம் பேசும் போது சந்திரிகா அரசு எப்போதும் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும், இலங்கை இந்தியாவிடம் பெரும்பாலும் இராணுவ உதவியையே பெற விரும்புவதாகவும் கூறினார். [வ]

## செயலகத்திற்கு இன்று வரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் இன்று காலை 9 மணிக்கு செயலகத்திற்கு வருகை தருமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கேட்டுள்ளார். (வ)

## மத்திய அரசின் எச்சரிக்கையான அணுகுமுறையில் வை.கோ. திருப்தி

[புதுடில்லி]

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் எச்சரிக்கையான அணுகுமுறை குறித்து தான் முழு மனத்திருப்தி கொள்வதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலர் வை.கோபாலசாமி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக வை. கோபாலசாமி நேற்று புதுடில்லியில் பிரதமமந்திரி வாஜ்பாயையும், பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸையும் சந்

[4ஆ பக்கம் பார்க்க]

## ராணுவ அதிகாரிகள்-ஹில் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கை அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கக் கொழும்பு வந்துள்ள பஞ்சாப் மாநிலத்தின் காவல் துறை முன்னாள் தலைவர் கே.பி.எஸ் ஹில் நேற்றுக் கொழும்பில் இராணுவ அதி

[4ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5மணிக்குஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## கப்பல் சேவை நடைபெறவில்லை

[யாழ்ப்பாணம்]

நேற்று நடைபெற இருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பல் சேவை பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு நடைபெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. [ச]

## பி.பி.ஸி. தமிழோசையின் அப்பட்டமான பொய்

[யாழ்ப்பாணம்]

யாழ்.குடாநாட்டில் தடைசெய்யப்பட்ட பத்திரிகை தொடர்பாக கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் செய்தி வெளியிட்ட லண்டன் பி.பி.ஸி தமிழோசை யாழ். குடாநாட்டில் ஒரே ஒரு பத்திரிகை மட்டுமே வெளிவந்தது என அறிவித்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

யாழ். குடாநாட்டில்வெளிவந்து கொண்டிருக்கும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனா வைத்தியசாலையில் 19 சடலங்கள் ஒப்படைப்பு எவையும் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு 13 சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இவற்றுள் நான்கு சடலங்கள் பெண்களுடையது என்றும் 9 சடலங்கள் ஆண்களுடையது என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஏற்கனவே ஐந்து சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஒரு சடலம் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## களஞ்சியத்தில் மா தாராளம் பாணுக்கோ தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் போதியளவு மா கையிருப்பில்இருந்த போதும்பெரும்பாலான மக்களின் காலை உணவான பாணுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள் காலை உணவு இன்றி பட்டினியால் வாடுவதாக தெரியவந்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்

(சென்னை)

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் சண்டையை முடிவுக்குக் கொண்டுவந்து அதில் பிரதமர் வாஜ்பாய் தலையி[illegible] வேண்டும் என்று முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசும் விடுதலைப் புலிகளும் சண்டையை நிறுத்தி அவர்கள் தற்போது இருக்கும் பகுதிகளில் இருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி. பி. உறுப்பினர் இருவர் சுட்டுக் கொலை

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். இச் சம்பவத்தின் போது இரண்டு பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். நேற்று மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் விழாவுக்குச் சென்ற போதே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது, இச் சம்பவத்தில் சகாப்தின் றியாஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

**வியாழ்-சனிமாற்றம்**

சிவராசா வெளியிட்டவிண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் யோக பலன் சனி மாற்றம் உங்களுக்கு எப்படி (கனவுகளுக்கு பலாபலன்களும் உள்ளன)என்று கேட்டு வாங்குங்கள்.

431

**தவறிவிட்டது**

பெரியதம்பி நாகராசா என்பவரின் தேசிய அடையாளஅட்டை ராணுவவிசேட அடையாள அட்டை. இல. 612013586V. 0907025890 இரண்டையும் திருநெல்வேலி சிவன்கோவிலுக்கும்மாட்டின் றோட்டிற்கும் இடையில் 20-5-2000அன்று தொலைந்துவிட்டது கண்டு எடுத்தவர் தயவு செய்து திருநெல்வேலி தேங்காய்க்கடை தருமுவிடம் கொடுக்கவும் சன்மானம் வழங்கப்படும்

[440]

# தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு

## 'கெயர்' நிறுவனம் உதவி

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப்பகுதியில் தங்கி உள்ளவர்களுக்கு சமையல் பாத்திரங்கள, பிளாஸ்ரிக் பாய்கள் போன்றவற்றை 'கெயர்' மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்றவெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். (க-41)

# யாழ். யுத்தநிலைகுறித்து இடது சாரிகள் ஆராய்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள யுத்த நிலையை அடுத்து கொண்டு வரப்பட்ட அவசர காலசட்ட விதிகளால் நாடு பூராவும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இடதுசாரிக் கட்சிகள் விரைவில்க்கூடி ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லங்கா சமசமாஜக் கட்சி, ஜே.வி.பி புதிய இடதுசாரி முன்னணி ஸ்ரீலங்கா கம்யூனிஸ் கட்சி ஆகியனவே கூடி ஆராயவுள்ளதாக தெரியவருகிறது.

(வ-ச)

## VYAMBA DISTILLERIES (PVT) LTD.

16, KANDAPPAH SEGARAM VEETHY, JAFFNA-

எங்கள் உற்பத்தியாகிய

**" அதி விஷேச சாராயம் "**

**Extra Special 750 ml**

**" " 180 ml**

**விற்பனைக்கு உண்டு**

எமது வியாபார நிலையம் தற்காலிகமாக கீழே உள்ள விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

(அனுமதி பெற்ற மதுசாலைக்கு மட்டும்)

**9, கோணாவளை ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

நிர்வாக முகாமையாளர்-

(449)

## கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ்

**37, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை ஒரு வார காலத்திற்குள் மீளப்பெற்றுக் கொள்ளவும்

தொடர்பு: தாவடி வட பத்திரகாளி
அம்பாள் கோவில்
அருகாமை.

(450)

**யாழ். பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்**

**நிதிக் குழு கூட்டம்**

யாழ். பல்கலைக்கழக நிதிக்குழு கூட்டம் 26-05-2000 காலை 10.00 மணிக்கு பல்கலைக்கழக சபா மண்டபத்தில் கூடவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொ. பாலசுந்தரம்
பிள்ளை
உபவேந்தர்.

(333)

## TRRO நிறுவனம்

## அலுவலக இடமாற்றம்

106, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தற்காலிகமாக மானிப்பாய் வீதி, உரும்பிராயில் அமைந்துள்ள உப காரியாலயத்தில் 23-05-00 தொடக்கம் காலை 9-00 மணி — 1-00 மணி வரை இயங்கும் என்பதை அறியத்தருகிறோம்.

அ, நல்லதம்பி
தலைவர்.

## வீடு வளவு விற்பனைக்கு

கடையுடன் சேர்ந்தவீடு வளவு விற்பனைக்கு உண்டு மல்லிகா மிக்ஷர் தொழிலகத்துக்கு முன்பாக உள்ளது.

தொடர்பு
ம. சுரேஸ்குமார்
மல்லிகா மிக்ஷர் தொழிலகம்
கூழாவடி, ஆனைக்கோட்டை
மானிப்பாய்.

(447)

## இடம் மாற்றம்

32/1 கல்லூரி வீதி, நீராவியடியில் இயங்கி வந்த

**பவானி விலாஸ் கச்சான் அல்வா**

விற்பனை நிலையம் தற்பொழுது

**மானிப்பாய் கூழாவடி (4 ம்கட்டை)**

**மல்லிகா மிக்சர்**


முன்பாக இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்கட்கும் அன்பர்கட்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
எஸ். தனராஜா

(445)

# ஓராண்டு நீங்காத நினைவலைகள்

தாய் மடியில் இறையடியில்



11 - 01 - 1981 24 - 05 - 1999

## இராஜகோபால் கங்கேசன்

அழியாத சுவடாகி - நெஞ்சை
நித்தம் நெருடும் வடுவாகி
ஆறாத துயர்தந்து - அவனியை
நீ துறந்து ஆண்டு ஒன்று ஆகியது

எம்முடன் பல நிகழ்வுகளில் - நீ
சுமைதாங்கிய நினைவுகள்
கூடியிருந்த நினைவுகள் - நாம்
கூடிச் செய்த குறும்புகள்

இவை எண்ணிப்பார்க்கையிலே - எம்
விழியில் நீரருவி பாய்கிறது
உன் நினைவுகள் எம் வாழ்வில் - நிதம்
பூக்கும் புது மலர்கள்.

நண்பர்கள்

[437]

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்

தாய்மடியில் இறையடியில்



11-01-1981 24-05-1999

## இராஜகோபால் கங்கேசன்

வளர்மதி கழகத்து இளம் பிறையே!
இளமையில் எமை விட்டுப் பிரிந்த குருத்தே!
திறமையில் ஜொலித்த இளந்தளிரே;
அழகான அகமதை கொண்ட கங்குவே

வளர்மதி முற்றத்தில் தவண்டெழுந்து
முன்பள்ளியில் முளைவிட்டு தளிர்பரப்பி
கூடிமகிழ்ந்து கூலாவி எம் நினைவில்
நீங்கா தடம் பதித்து இளமையில் பிரிந்த கங்குவே:

உனைபிரிந்த ஓராண்டு நினைவு தன்னை
ஈராயிரமாம் ஆண்டில் நினைவு கூருகிறோம்
ஓராண்டு தான் சென்றாலும்-எங்கள் இதயத்தில்
நீ பதித்த தடங்கள் என்றும் நீங்கா

**வளர்மதி முன்னேற்றக் கழகமும்,**
**சனசமூக நிலையமும்,**
**கொக்குவில்.**

(438)

இடும்பைக்கு இடும்பை படுப்பர் - இடும்பைக்கு இடும்பைப்படாதவர்.
- குறள்

# வலம்புரி

## தொண்டும் தியாகமும்

அரச அதிபர் மாகாணத்தின் குட்டி அரசன், முட்டிமோதும்பிரச்சினைகள் கண்டு தட்டிக் கழிக்கக் கூடாது. அவற்றை வெட்டியாடும் விறல் அன்னவர்க்காக வேண்டும். அவரின் துணைக் கரங்களாக மக்கள் தொண்டுக்கு நியமிக்கப்பட்ட துணை அரச அதிபர்கள் ஆல் போல் நிழல் பரப்ப வேண்டிய காலம்இது. நிர்வாகக் கதிரைகளில் இருந்தெழும்பியவர்களுக்கு ஆக்க பூர்வமான செயல் புரிய வாய்த்த வேளை இதுவென்றே கூற வேண்டும். இவர்களை அணி செய்யும் கிராம சேவகர்கள் மக்களை நாடி, அவர்கள் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்களில் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் அறவே இருக்கக் கூடாது.

நிழல் மனிதர்களுக்கு நிவாரணம் பெறும் நிபுணர்கள் அசல் மனிதர்களின் வயிற்றில் அடிக்காமல் இருக்க வேண்டும். ஷெல் பட்டுச் சிதறியோர்க்கு வரும் நட்டஈட்டில் சம்திங் கேட்கும் சிந்தையில்லாதவர்சந்ததி தழைக்குமா என்று எண்ணத் தோன்றுகிறது.

திணைக்களங்கள் எதுவாகிலும் மனிதனின் இடர் நிலையில் பணி புரிவதில் மகிழ்ச்சியடைய வேண்டும். அரசஅதிகாரக் கதிரைகளும் நிரம்பிய வேதனமும் தியாக உணர்வு தோய்ந்த பணிக்கே வழங்கப்படுகிறது. பஞ்சியைப்பாராமல் ஓடியாடி மனம்உடைந்தமக்களுக்கு உண்மையான தொண்டுகளைச் செய்யவேண்டும். இல்லையேல் அண்மி வரும் காலம் இவர்களை மன்னிக்காது. துலாச் கோல் போல் வாழாத குற்றத்திற்கு தண்டனை கொடுக்கவே செய்யும்.

கூட்டுறவுச்சங்கங்களில் பொருள் விநியோகங்கள் மனம் பொருமாமல்நடைபெற வேண்டும். ஏழைகளின் பங்கீட்டில் தோல் இருக்கச் சுளை விழுங்குப் மாநீசர்களை ம்க்கள் மன்னிக்க மாட்டார்கள். தவிச்ச முயலடிப்பவர்களுக்கு இதுவல்ல காலம். வெதும்பிய மக்களை மேலும் துன்புறுத்துவது மனிதப்பண்பாகாது,

மக்கள் சேவைமகேசன் சேவை என்பதை மறத்தலாகாது. அறத்தால் வருவதே இன்பம் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். மக்கள் நிலை புரிந்து மகத்தான சேவை செய்ய தயாராவோம்.

- அன்புடன் ஆசிரியர்

✶ யாழ். குடாநாட்டு மக்களின்

# உடனடித்தேவையை பூர்த்தி செய்ய உணவுப்பொருட்கள் அனுப்பப்படும்

## அமைச்சர் சரத்அமுனுகம இணக்கம்

(கொழும்பு)

இன்றைய சூழ்நிலையில் யாழ். குடாநாட்டின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அத்தியாவசிய உணவுப்பொருள்களுடன் உணவுக் கப்பல் ஒன்றை யாழ்ப்பாணம் அனுப்பிவைப்பதற்கு வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தன்னைச் சந்தித்த ஈ.பி.டி.பி. தூதுக்குழுவினரிடம் உறுதியளித்தார்.

இவ்வுணவுக் கப்பலில் கோதுமைமா, 250 மெற்றிக் தொன் சீனி, 150 மெற்றிக் தொன் பால்மா வகைகள், 500 மெற்றிக் தொன் பருப்பு ஆகிய பொருட்களே உடனடியாக அனுப்பி வைக்கப்படவுள்ளது

ஈ.பி.டி.பி. எம்பிக்களான வீ.கே ஜெகன், எஸ். தவராசா கட்சியின் ஆலோசகர் கலாநிதி விக்னேஸ்வரன் ஆகியோரே அமைச்சரைச் சந்தித்தவர்களாவர்.

அரச அதிபர் மூலமாக பெற்றோலியப்பொருட்களை விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ப்பட்டுள்ளதாகவும் இச்சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டது.

பொருட்களை ஏற்றியிறக்குவதற்குப்பயன்படுத்தப்படும் லொறிகளின் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் சரத் அமுனுகம இத்தூதுக் குழுவினரிடம் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-04)

### பி, பி, சி...

வலம்புரி பத்திரிகையை இருட்டடிப்புச் செய்து லண்டன் பி.பி.ஸி தமிழோசை கீழ்த்தரமாக நடந்து கொண்டமை வேதனைக்குரியது'

சர்வதேச ரீதியில் பிரபல்யம் பெற்ற ஒலிபரப்புச் சேவை இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டமை குறித்து வலம்புரி நிர்வாகம் உரியவர்களிடம் தொடர்பு கொண்டு விசாரித்தபோது யாழ்ப்பாணத்துச் செய்தியாளர் ஒருவரே யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு பத்திரிகை மட்டுமே இருந்தது என்ற செய்தியைத் தந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்தி குறித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வலம்புரி தயாராகியுள்ளது.

சட்டரீதியாக யாழ். மாவட்ட நீதிமன்றில் சத்தியப் பிரமாணம் எடுத்து உரிய அரச திணைக்களங்களுக்கு உரிய ஆவணங்களை அனுப்பிவைத்து சட்டமுறைப்படி ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி பத்திரிகையை இருட்டடிப்புச் செய்த தகுதியற்ற கீழ்த்தரமான செய்தியாளரிடமிருந்து செய்திகளைப் பெற்று இனியும் ஒலிபரப்புச் செய்தால் பி. பி. ஸி யும் சேறு பூசிக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. [ந]

## வழமை போல கெல்ற் வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கி வந்த கெல்ற் வகுப்புகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மேற்படி வகுப்புகள் இன்றுமுதல் [24-5-2000] ஆராம்பமாகுமென தெரிவிக்கப்படுகிறது. [க]

## யாழ், பிரதேச செயலர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக சகல அலுவலர்களும் கிராம அலுவலர்களும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் இன்று 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் சமூகமளிக்குமாறு யாழ். பிரதேசசெயலாளர் தெரிவித்துள்ளார். (க)


எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

சிறி நதியா நகைமாடம்
சிறி ரூபா நகைமாடம்

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2 ஆம் கிளை)
131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சிறி ரூபா)

மேற்படி முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனங்கள் அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு அமைய தற்காலிகமாக

இலக்கம்:- 80C, K. K. S. றோட்,
சுன்னாகம்.

என்ற முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

சிறி நதியா நகைமாடம்,
(சிறி ரூபா நகைமாடம்)
80C, K. K. S. றோட்,
சுன்னாகம்.

(சி-454)



அறிவித்தல்

நுணாவிலைச் சேர்ந்த மனோஜாதேவி சண்முகநாதன் (ராசாத்தி) ஆகிய நான் ஸ்ரீறஞ்சன் கொக்குவில் வீட்டில் தங்கியிருப்பதாக பெற்றோருக்கு (பாலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அறியத் தருகிறேன்.

தகவல்
திருநெல்வேலி
றஞ்சன்

(449)



இடம் மாற்றம்

புதிய நதியா நகைமாடம்
103. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
நதியா ஜுவல்லறி
02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
ஆகிய ஸ்தாபனங்கள் தற்பொழுது
யாழ் நதியா
என்ற பெயரில் பிரதான வீதி சங்கானை என்ற விலாசத்தில் இயங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கட்கும் அன்பர்கட்கும் அறியத்தருகின்றோம்.

ஸ்தாபனத்தார்

[451]



எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

சிவா நறுமணப் பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு அமைய தற்காலிகமாக

பொன்னையா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

என்ற முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருவதோடு, எம்மிடம்

★ பிஸ்கட் ★ டொபி
★ பேக்கறி உற்பத்திக்கு தேவையான பொருள்கள்
ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள்
★ பொலித்தீன் வகைகள்

இன்னும் பலவற்றையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகிறோம்.

குறிப்பு; ஆறுகால்மடத்திற்கு அடுத்த பஸ்தரிப்பு நிலைய தபால்கந்தோருக்கு அருகாமையில்.

(442)



முக்கிய அறிவித்தல்

யாழ்-நகரில் இயங்கி வந்த
நியூ பிரியங்காஜுவலர்
177ஏ கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நகை மாடம் தற்போது யாழ்.வீதி மானிப்பாயில்G-T தொலைத்தொடர்பு நிலையம் இயங்கிய வீட்டில் தற்காலிகமாக எமது ஸ்தாபனம் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளருக்கும் அன்பர்கட்கும் அறியத் தருகின்றோம்;

நன்றி

இப்படிக்கு
நியூ பிரியங்கா
உரிமையாளர்

(444)

# சாவகச்சேரிப்பகுதி 'ஷெல்' வீச்சில் இருவர் பலி, ஐவர் காயம்!

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற ஷெல்வீச்சுத் தாக்குதலில் மீசாலை மேற்கைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் இளம் தாயாரான கிருஷ்ணகாந்தன் இந்திராணி (வயது 36) என்பவரும் சரசாலை வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த வைத்திலிங்கம் முத்துக்குமாரு (வயது 80) ஆகியஇருவரும் கொல்லப்பட்டனர், காயமடைந்தவர்கள் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு;

மீசாலை மேற்கைச்சேர்ந்த குஞ்சுத்தம்பி மார்க்கண்டு (வயது40), மார்க்கண்டு ஸ்ரீகா (வயது 18), சரசாலையைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பிராசா (வயது 74). கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் (வயது 48), மட்டுவிலைச் சேர்ந்த கந்தையா வல்லிபுரம் (வயது 68), ஆகியோரே காயமடைந்தவர்களாவர்,

**மத்திய , , '-**

தித்து இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக அவர்களது கவனத்துக்கு கொண்டு வந்தனர். (வ)

**19 சடலங்கள் . . .**

நண்பகல் அளவில் கொண்டு வரப்பட்டது.

மேற்படி சடலங்கள் எவையும் நேற்றுவரை அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

**ராணுவ...,**

காரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட மற்றும் விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் இடம்பெற்றுள்ள முக்கியமான பாதுகாப்பு ஆலோசனை வழங்குவதற்காகவே ஹில்லை அரசு அழைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**களஞ்சியத்தில். .-**

தினமும் காலை வேளையில் கடைகளின் பாணுக்கு வரிசையில் நீண்ட நேரம் கால் கடுக்க நின்றும் பாண் கிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பிப் போவதைதினமும் அவதானிக்க முடிகிறது. [வ[

**அரசும்...**

கொண்டு யாழ். மக்களை பத்திரமான பகுதிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும்

**ஈ.பி.டி.பி,.**

(ரூபன்) (வயது 21), ஆனந்தராசா சுரேசன் (சுபாஸ்) (வயது 28) ஆகிய இரு உறுப்பினர்களுமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

அத்தாயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை மனோரஞ்சிதம் (வயது 40), தம்பசிட்டியைச் சேர்ந்த நடராசா யசோகாந்தன் (வயது20) ஆகிய பொதுமக்களே காயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பருத்தித்துறை மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது.

**படைத்தளபதிகள்-.-.**

காப்பு ஆலோசகருடனும் ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

அத்துடன் இந்திய ஜனாதிபதி கே.ஆர், நாராயணனையும் குடியரசு மாளிகையில் சந்தித்து இலங்கையின் யாழ். நிலைவரம் குறித்து விளக்கிய பிரதமர் வாஜ்பாய் அவசர தேவையேற்படின் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசனை செய்துள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்புச் சபைகள் கூட்டம் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற போது பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங் முப்படைத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ். குடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து இந்தியாவின் கடற்படையும், விமானப்படையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

# 'கிளினிக்' வழமைபோல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் யாழ். மாநகர சபையின் சுகாதாரப்பகுதி தனது வழமையான சேவைகளை வழங்கி வருகிறது.

இச் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்டு வரும் தாய் சேய் நல சிகிச்சைகள் இன்று நாச்சிமார் கோவிலடி சிகிச்சை நிலையத்திலும், நாளை நாவலர் வீதியில் அமைந்துள்ள சிகிச்சை நிலையத்திலும் நடைபெறவுள்ளதென வைத்திய கலாநிதி ஆர்.தெய்வேந்திரன் தெரிவித்தார். எனினும் இச்சிகிச்சை நிலைய சேவையில் குழந்தைகளுக்கான தடை. மருந்தேற்றும் பணி நடைபெறாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அலுவலகத்திற்கு வரமுடியாத ஊழியர்களை அவர்களுக்கு அண்மையிலுள்ள சுகாதாரப் பணிமனையில் கடமையாற்றுமாறும் அதனை உரிய பொறுப்பதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார். (ந)

## மரண அறிவித்தல்கள்

### கு. சி. கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆஸ்பத்திரி ஊழியர்)

யாழ்ப்பாணம் கச்சேரிகிழக்கு ஒழுங்கையைபிறப்பிடமாகவும், பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட கு. சி. கனகரத்தினம் நேற்றுக்காலை 8-00 மணிக்கு மூளாயில் காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னையா-செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும், தில்லையம்பலம், இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், யாழ்ப்பாணம் பிரபல புகையிலை வர்த்தகர் குட்டிப்பிள்ளையின் பேரனும், நாகம்மாவின் அன்புக் கணவருமாவார். சந்திரசோதி [கனடா], பாலசிங்கம் [கிராம சேவையாளர் ஈச்சமோட்டை], சாந்தகுமாரி [கனடா], விக்கினேஸ்வரராசசிங்கம் [கனடா] ஆகியோரின் அன்புத்தந்தையாரும், பாலேந்திரன் [கனடா], இரங்காதேவி, செல்வக்குமார் [கனடா], தட்சாயினி (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும். ஆதித்தன். அருணன், ஆதவன், அனுசாஜினி, அரவிந்தன், ஆர்சன், நிஷாந்தன். நிஷானியா, நிர்ஷன், சங்குகன், (கனடா) ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் மூளாயில் இன்று காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார். உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்
சி. க. பாலசிங்கம்
(கிராமசேவையாளர்
ஈச்சமோட்டை)

மூளாய் கிழக்கு
மூளாய்,
சுழிபுரம்.
(452)

### அரியகுட்டி சித்திரவடிவேல்(குகன்)

(குகன் ஸ்ரூடியோ சாவகச்சேரிஉரிமையாளர்)

சாவகச்சேரியில் வசிப்பவரும் வருணன் அச்சுவேலியை சேர்ந்தவரும் அரியகுட்டி சித்திரவடிவேல் 20-05-2000 அன்று அகாலமரணமானார்.

இவர் சித்திரவடிவேல் பவானியின் அன்பு கணவரும் ஸ்ரீராம் (மலேசியா) ஸ்ரீறங்கன் (கனடா) ஸ்ரீபிரகாஸ் (குகன்ஸ்ரூடியோ சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகௌரி, சந்திரவதனா ஆகியோரின் அன்புமாமனாரும் சிவதாரணி, சிவசங்கவி ஆகியோரின்அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் சாவகச்சேரி கல்வயலில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக் கொளளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்
வ, ஸ்ரீபிரகாஸ்(குகன்)

நிருபர்வளவு
கந்தமுருகேசனார்சிலையடி
மந்திகை
புலோலி கிழக்கு
புலோலி

(334)

### பரமேஸ்வரி பூபாலசிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமேஸ்வரி பூபாலசிங்கம் 23 - 05 - 2000 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், அபிமன் [யாழ். பல்கலைக் கழகம்] பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனை இன்று 24-05-2000 காலை 10 மணிக்கு (பு. நே) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்
பூ. அபிமன்
[மகன்]

சேச் லேன்,
கொக்குவில்.
(சி455)


# GELT Classes

**Manipay Hindu College**

**The GELT Classes at the above centre will recommence today (24.05.2000) at 3.00pm**

*ACADEMIC Co-ORDINATOR*

(446)



# ஆங்கில வைத்தியசாலை, பிறப்பு, இறப்பு பதிதல்

Dr. ஆனந்தராஜா லோறன்ஸ் J. P. அவர்களின் இல. 41, ஈச்சமோட்டை சுண்டிக்குளியில் இயங்கி வந்த வைத்தியசாலையும் பிறப்பு, இறப்பு பதிதலும் தற்போது ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கில் இயங்கி வருவதை அறியத்தருகிறோம்.

*Dr. J. A. Lawrence (J. P.)*
(பதிவாளர் யாழ் நகர் கிழக்கு)

(441)



# கணக்கீட்டு

மாணவர்களுக்கான
விசேட அறிவித்தல்

2000 **August** இல் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான எமது வகுப்புகள் 25-05-2K இல் காலை 10-00 இற்கு கீழ்க் காணும் நிறுவனத்தில் ஆரம்பிக்கப் படும்.

**BEACON**
கலாசாலை வீதி, திருநெல்வேலி,

]சி 453] *BALAVASAN*



# அறிவித்தல்

எமது வியாபார ஸ்தாபனமான (*V. S. B.* குறூப் ஏஜென்சி) விற்பனை நிலையங்கள் அன்பர்கள் வாடிக்கையாளர்கள் நன்மை கருதி மானிப்பாய் தினேஸ் பேக்கறி கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**VSB**

[335]


# இதய அஞ்சலி

23-05-2000 அன்று அகால மரணமடைந்த எமது கட்சியின் உறுப்பினர்கள்

சகாப்தீன் றியாஸ்
[தோழர் ரூபன்]

ஆனந்தராசா சுரேசன்
[தோழர் சுபாஸ்]

ஆகியோருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி
(ஈ. பி, டி, பி)
யாழ்ப்பாணம்.

(கி 336)

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சு கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெண்ணாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 24-ம் [illegible] வெளியிடப்பட்டது.